**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 339 நாள்: 28.07.2026

**பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒப்பந்தம் தொடர்புடைய பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அலுவலர்களுக்கான சிறப்புப் பயிற்சியினை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், இன்று தொடங்கி வைத்தார்.**

இன்று (28.07.2026) மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகை கூட்டரங்கில் பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒப்பந்தம் தொடர்புடைய பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அனைத்து பொறியாளர்கள், முதுநிலை கணக்கு அலுவலர், நிர்வாக அலுவலர், கண்காணிப்பாளர்கள், உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களுக்கு சிறப்புப் பயிற்சியினை தொடங்கி வைத்துப் பேசினார்.

இந்த பயிற்சி வகுப்பில் அலுவலர்களுக்கு டெண்டர் வெளிப்படைத்தன்மைச் சட்டம் மற்றும் விதிகள், மின்னணு-டெண்டர் & தேசியத் தகவல் மையத்தின் அரசு மின்னணு கொள்முதல் அமைப்பு (GEPNIC), தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் டெண்டர் தொடர்பான விதிகள், நகரத் திட்டமில் விதிகள், திடக்கழிவு மேலாண்மை தொடர்புடைய பணிகள், சட்ட நடைமுறை, பதிவேடுகள், செயலிகள், மின்னணு ஆளுமை மற்றும் அலுவலகம் பராமரிப்பு உள்ளிட்ட ஒப்பந்தம் மேற்கொள்வது தொடர்பாக இன்று (28.07.2026) முதல் 01.08.2026 வரை 5 நாட்கள் தினசரி காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை பல்வேறு நிகழ்வுகளாக பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒப்பந்தம் பணிகள் தொடர்புடைய 1,250 அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. ஒப்பந்தம் தொடர்பான இந்த சிறப்புப் பயிற்சியின் மூலம் ஒப்பந்தப் பணிகள் மற்றும் நடைமுறைகளை அனைத்து அலுவலர்களும் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் திரு.பி.சங்கரவேலு, உதவி ஆணையர் (பொது நிர்வாகம்) செல்வி உமா மகேஸ்வரி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**